# திருநீற்றுப் புதன்

## திருப்பலி முன்னுரை

இரக்கத்தின் காலமாகிய தவக்காலத்தினைத் துவக்க, நம்மையே தாழ்த்தி, இரக்கத்தை வெளிப்படுத்த இன்றைய திருநீற்றுப்புதன் திருப்பலிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

மண்ணில் பிறந்து, விண்ணில் சென்ற இறைமகன் இயேசுவின் அன்பையும் இரக்கத்தையும் அனுபவிக்க இக்காலம் நம்மை அழைக்கிறது. சாகடிக்கும் எண்ணத்தோடு தம்மைச் சூழ்ந்தவர்களையும் சபிக்காமல், ஆசி வழங்கிய அன்பு இயேசுவின் அன்பு. இது அன்பின் காலம், இரக்கத்தின் காலம், தவத்தின் காலம், ஒறுத்தலின் காலம். வெறுப்பை ஒறுத்து, தவத்தை தரித்து, அன்பை அணிந்து இரக்கத்தை விதைப்போம்.

இன்றைய முதல் வாசகத்தில், “உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொள்ளுங்கள்” என்று நமது மனம் மாறுதலை விரும்புகின்றது யோவேல் இறைவாக்கினரின் வார்த்தைகள்.

மண்ணிலிருந்து உருவாகி, மீண்டும் மண்ணுக்கே திரும்பும் இந்த நிலையற்ற வாழ்க்கையில் நம்மோடு நம் ஆன்மாவைக் காத்துக் கொண்டு, இறைவனின் பாதம் பற்றி நடப்போம்.

இன்றைய நற்செய்தியில், உண்மையான நோன்பு என்பது உள்ளத்தினுள் கடைப்பிடிக்கப்பட வேண்டியது என்பதை இயேசு கூறுகின்றார். வேண்டுதல்களையும் நேர்ச்சைகளையும் பிறர் அறிய செய்கின்றோம்.

இருகரம் கூப்பி இறைவனை வேண்டுவதிலும்

ஒரு கரம் நீட்டி எளியவனுக்கு உதவுவது சிறந்தது.

எனவே ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்பதனை மனதில் கொண்டு வாழ்வில் பின்பற்றுவோம். இத்தவக்காலத்தை அர்த்தமுள்ள முறையில் பயன்படுத்துவோம். வருடந்தோறும் வரும் சம்பிரதாய விழாவாக எண்ணாமல், மனமாற்றம் பெற்று இறை அழைப்பினை உள்ளத்தில் உணர்ந்து இப்பலியில் பங்கேற்போம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com